Department of Education

GOVERNMENT OF WESTERN AUSTRALIA

Shaping the future

# பாலர் பாடசாலை மாணவர்களுக்கு வணக்கம்




CC BY

# ஒப்புரை

## மேற்கு அவுஸ்திரேலியா முழுவதிலும் எமது மாணவர்கள் வசிக்கும் மற்றும் கல்வி கற்கும் நிலங்கள் மற்றும் நீர்நிலைகளின் பாரம்பரியப் பாதுகாவலர்களை நாங்கள் அங்கீகரித்து மதிக்கிறோம்.

முதியவர்கள், பெற்றோர்கள், குடும்பங்கள் மற்றும் சமூகங்கள் தான் தங்களது குழந்தைகளின் முதல் ஆசான்கள் என்பதை நாங்கள் அங்கீகரித்து ஏற்றுக்கொள்கின்றோம். மேலும், பூர்வீகக்குடியினப் பிள்ளைகள் வகுப்பறைக்குக் கொண்டு வரும் கலாச்சாரங்களையும் திறன்களையும் நாங்கள் அங்கீகரித்து மதிக்கிறோம். நாடு, சமூகம், மொழி மற்றும் கலாச்சாரம் ஆகியவற்றுடனான தங்களது தொடர்புகளைப் பகிர்ந்துகொள்வதன் மூலமும் தலைமுறை தலைமுறையாகப் பகிரப்படும் வாய்வழி வரலாறுகள், கதைகள் மற்றும் வாழ்ந்த அனுபவங்கள் மூலமும் கற்பித்தல் மற்றும் கற்றல் தொடர்பான நீண்ட பாரம்பரியத்தைப் பூர்வீகக்குடியின மக்கள் கொண்டுள்ளனர்.

பூர்வீகக்குடியினப் பிள்ளைகள் தங்களது வீடுகளிலிருந்தும் சமூகங்களிலிலிருந்தும் வகுப்பறைக்குள் கொண்டு வரும் அறிவை நாங்கள் அங்கீகரித்து மதிக்கிறோம்.
'பூர்வீகக்குடியினர் 'எனும் பதம் பூர்வீகக்குடியினரையும், பூர்வீகக்குடி மற்றும் 'டொரெஸ்' நீரிணைத் தீவு வாசிகளையும், மற்றும் சுதேசக் குடியினரையும் குறிப்பதற்குப் பயன்படுத்தப்படுகிறது.
தனிநபர்களைக் குறிப்பிடும் போது, பூர்வீகக்குடியின நபர் எனும் பதத்தைப் பயன்படுத்தவும்.

AISWA
Association of Independent Schools of Western Australia

CATHOLIC EDUCATION
WESTERN AUSTRALIA

TRIM: D22/0714308
ISBN: 9780730746713

© கல்வித் திணைக்களம்
மேற்கு அவுஸ்திரேலியா 2022

கல்வித் திணைக்களம்
151 ரோயல் வீதி
கிழக்கு பேர்த் WA 6004
9264 4111
Education.wa.edu.au

இந்தத் தகவல்களை, கோரிக்கையின் பேரில் பொருத்தமான மாற்று வடிவங்களில் பெற்றுக்கொள்ள முடியும்.

CC BY

# உள்ளே

**பாலர் பாடசாலைக் கல்வியைத் தொடங்குவது என்பது உங்களுக்கும் உங்கள் குழந்தைக்கும் ஒரு அற்புதமான மற்றும் முக்கியமான மாற்றம் ஆகும்! உங்கள் பிள்ளையின் ஆரம்பக் கல்விப் பயணத்தின் துவக்கத்தை மகிழ்ச்சியானதாகவும் நேர்மறையானதாகவும் ஆக்க உதவும் வகையில் இந்தக் கைநூல் வடிவமைக்கப்பட்டுள்ளது.**

**பாலர் பாடசாலைக்குத் தயாராவதற்கு உதவும் நடைமுறை உதவிக்குறிப்புகளையும் உங்கள் பிள்ளை என்ன கற்றுக்கொள்வார் மற்றும் அவர்களின் கற்றல் தொடர்பான பயணத்தில் நீங்கள் எவ்வாறு உதவலாம் என்பது பற்றிய தகவல்களையும் நீங்களும் உங்களது குடும்பத்தினரும் காண்பீர்கள்.**

# எனது பிள்ளையை எப்போது சேர்க்கலாம்?

மேற்கு அவுஸ்திரேலியாவில், அனைத்துப் பிள்ளைகளும், அவர்கள் மாநிலத்தின் எப்பகுதியில் வாழ்ந்தாலும், வாரத்திற்கு 15 மணிநேர பாலர் பாடசாலைக் கல்வியைப் பெற முடியும். (இரு வாரங்களுக்கு 30 மணிநேரம்). பாலர் பாடசாலைக்கு வருவதன் மூலம், முழு நேரப் பாடசாலையின் முதல் ஆண்டாகக் கருதப்படும் ஆரம்பப் பாடசாலைக் கல்விக்கு முந்தைய கல்விக்குப் பிள்ளைகள் தயாராகின்றனர்.

பாலர் பாடசாலைக் கல்வியைத் துவங்கும் உங்களது குழந்தையின் வயது ஜூன் 30 ஆம் திகதியில் 4 ஆக இருக்க வேண்டும். சில பிள்ளைகள் பாலர் பாடசாலையில் சேரும்போது போது அவர்களது வயது 3 ஆக இருப்பதோடு பின்னர் அதே வருடத்தில் 4 வயதையடைகிறார்கள் என்பதே இதன் அர்த்தம் ஆகும்.

**உங்களது பிள்ளை பிறந்த மாதம்**

**ஜனவரி முதல் ஜூன் வரை**
3 வயது, 4 வயதை அடைகிறார்கள்: பாலர் பாடசாலையில் சேருங்கள்

**ஜூலை முதல் டிசம்பர் வரை**
4 வயது, 5 வயதை அடைகிறார்கள்: பாலர் பாடசாலையில் சேருங்கள்

**பாடசாலைக் கல்வி வயது கணிப்பான்**
education.wa.edu.au/enrolling-in-school



CC BY

# சேர்வதற்கு முன்

உங்கள் பிள்ளையின் முதல் ஆசான் என்ற வகையில் நீங்கள் வகிக்கும் பங்கு முக்கியமானதாகும். பிள்ளைகள் தமது பாடசாலைக் கல்வியைத் தொடங்குவதற்கு முன்பு பல முக்கியமான விடயங்களைக் கற்றுக்கொள்கிறார்கள்.

உங்கள் பிள்ளையின் இயலுமை அல்லது வளர்ச்சிப் படிநிலை எவ்வாறாக இருந்தாலும், அவரிடம் ஏற்கவே உள்ள கற்றல் மற்றும் தனித்துவமான அனுபவங்களை பாலர் பாடசாலைக் கல்வியைத் தொடங்கும் போது தன்னுடன் அவர் கொண்டு வருவார். பாலர் பாடசாலையில், தங்களது கல்விப் பயணத்தின் கட்டுமானத்திற்கான அடித்தளமாக இது அமைகிறது.


பாலர் பாடசாலையில் தமது பிள்ளைகளைச் சேர்க்கும் யோசனை சில பெற்றோர்களுக்கும் குடும்பங்களுக்கும் சற்றுச் சிரமமான ஒன்றாக இருக்கலாம். உங்கள் பிள்ளை வளர்ந்து வருகிறார்! பாலர் பாடசாலைக் காலப்பகுதி என்பது, உங்கள் பிள்ளை மற்றப் பிள்ளைகளுடன் இணைந்து மிகவும் மகிழ்ச்சியாக இருப்பதற்கும் அவரது தன்னம்பிக்கையை வளர்த்து ஈடுபாட்டுடன் கற்பவராகக அவரை உருவாக்குவதற்கு உதவும் பல புதிய விடயங்களைக் கற்றுக் கொள்ளவதற்குமானதொரு வாய்ப்பாகவும் இருக்கிறது. நீங்கள் வழங்கும் உற்சாகமும் ஊக்கமும் உங்கள் பிள்ளை பாடசாலையில் வசதியாக அமர உதவும். பாலர் பாடசாலைக்குச் செல்வதைப் பற்றிய உங்கள் பிள்ளையின் கருத்து என்ன என்பதைப் பற்றி அவருடன் பேசுங்கள். இது உற்சாகமானதாகவும் சிறிது அச்சமூட்டுவதாகவும் இருக்கலாம். பாடசாலை குறித்த உங்களது சொந்த அனுபவங்களைப் பகிர்ந்துகொள்வது பாலர் பாடசாலைக் கல்வியைத் தொடங்கும் உங்கள் பிள்ளையின் தன்னம்பிக்கை அதிகரிக்க உதவும். உங்களுக்கு சில கஷ்டமான அனுபவங்கள் இருந்தாலும், புதிய நண்பர்களை உருவாக்கிக்கொள்வது போன்ற சில மகிழ்ச்சியான நினைவுகளை உங்கள் பிள்ளையுடன் பகிர்ந்து கொள்ளுங்கள்.

# தயாராகுதல்

### உங்கள் பிள்ளைக்கு என்ன தேவை



**ஒரு பை**



**ஒரு தொப்பி**



**ஒரு தண்ணீர்ப் போத்தல்**



**ஒரு பகலுணவுப்**
மதிய உணவு மற்றும் சில சிற்றுண்டிகளுடன்



**மாற்று உடைகள்**
காலுறைகள் மற்றும் உள்ளாடைகள் உட்பட

உங்கள் பிள்ளைக்கு வேறு என்ன தேவைப்படும் என்பதை அறிய உங்களது பாடசாலை அல்லது சமூக பாலர் பாடசாலையை அணுகுங்கள்.

## ஆசிரியரைச் சந்தித்தல்

உங்கள் பிள்ளையின் ஆசிரியரைத் தெரிந்துகொள்வது அவசியமானதாகும். பாலர் பாடசாலைக் கல்வியை ஆரம்பிக்கும் உங்கள் பிள்ளை தொடர்பான ஏதேனும் கேள்விகளுக்குப் பதிலளிக்கவும், நாளொன்றில் என்ன நடக்கின்றது என்பதைப் பற்றிப் பேசவும் குறித்த ஆசிரியரால் முடியுமாக இருக்கும். குறித்த ஆசிரியர் உங்களைத் தெரிந்து கொள்ளவும், உங்கள் பிள்ளைக்கு என்ன தெரியும், அவருக்கு எவ்வாறு சிறந்த முறையில் உதவுவது என்பதைத் தெரிந்துகொள்ளவும் இது ஒரு வாய்ப்பாக அமையும்.

பல பாடசாலைகள் கல்வியாண்டு தொடங்குவதற்கு முன்னரே குடும்பங்களுக்கான அறிமுக அமர்வுகளை நடாத்துகின்றன. இது, குறித்த ஆசிரியர் மற்றும் ஏனைய குடும்பங்களை நீங்கள் சந்திப்பதற்கும், அவ்வருடத்துக்கு என்ன திட்டமிடப்பட்டுள்ளது என்பதைத் தெரிந்துகொள்வதற்குமான சிறந்ததொரு வாய்ப்பாகும்.

அரசாங்கப் பாடசாலைகளில் பூர்வீகக்குடியின மற்றும் ‘டொரஸ் ஸ்ட்ரெய்ட்’ தீவுவாசிகளின் வம்சாவளியைச் சேர்ந்த குடும்பங்களுக்கு பூர்வீகக்குடியின மற்றும் தீவுவாசிகளுக்கான கல்வி அதிகாரிகள் (Aboriginal and Islander Education Officers) உதவி புரிகின்றனர்; அரச சார்பற்ற பாடசாலைகளிலும் இதே போன்ற உதவிகள் வழங்கப்படலாம். குடும்பங்கள் பிள்ளையின் ஆசிரியரைச் சந்திக்கும் போது மொழிபெயர்ப்பாளர் ஒருவரை ஏற்பாடு செய்து கொள்வதற்கு, பாடசாலையுடன் இணைவாய்ச் செயல்படலாம். தேவைப்பட்டால், குறித்த பாடசாலை அல்லது சமூக பாலர் பாடசாலையானது மேலதிக பேச்சுவழக்காக ஆங்கிலம் பேசும் குடும்பங்களுக்கு ஆசிரியர் சந்திப்புகளில் மொழிபெயர்ப்பாளர் ஒருவரை ஏற்பாடு செய்து கொடுக்க முடியும்.



CC BY

# அன்றாட அலுவல் வழமைகள்

## ஆடையணிதல்

உங்கள் பிள்ளைக்கு சீருடை தேவைப்படலாம் அல்லது தேவைப்படாமலும் இருக்கலாம். சௌகரியமே மிக முக்கியமானது, எனவே அவர்களுக்கு நடைமுறை சார்ந்த உடைகள் மற்றும் பொருத்தமான காலணிகளை அணிவியுங்கள். மண்ணும் அழுக்கும் படும் விதத்திலான விளையாட்டு என்பது பாலர் பாடசாலையில் கற்றலுக்கான ஒரு அங்கமாகும். எனவே பாடசாலை முடிந்து வீட்டுக்கு வரும் உங்கள் பிள்ளையுடன் கொஞ்சம் அழுக்கும், நிறப்பூச்சும், அல்லது பசையும் கூடவே சேர்ந்து வருவதை எதிர்பாருங்கள்.

பாடசாலையின் முதல் நாளுக்கு முன்னர் ஆடை அணிவதைப் பயிற்சி செய்வது நல்லது – உங்களுடைய பிள்ளைக்கு யாருடைய உதவியும் இன்றி ஆடைகளை அணியவும் களையவும் முடியுமாக இருப்பின், அது தாயாராகும் செயல்முறையை இன்னும் இலகுவானதாக்கும்.

வெளியில் இருக்கும் போது தொப்பி அணியுமாறு உங்கள் பிள்ளையை ஊக்குவிக்கவும், ஏனெனில் அவர்கள் பாலர் பாடசாலைக்கு வெளியில் விளையாடும் போது தொப்பி அணிந்திருக்க வேண்டியிருக்கும்.
உங்கள் பிள்ளையின் உடை, பகலுணவுப் பெட்டி, தொப்பி, பை மற்றும் காலணிகள் ஆகியவற்றில் அடையாளக் குறியிட மறவாதீர்கள். பாலர் பாடசாலையில் தொலைந்த உடைமைகளுக்கான ஒரு பெட்டி வைக்கப்பட்டிருக்கும்.

## பாலர் பாடசாலைக்குப் பிரயாணம் செய்தல்

பாலர் பாடசாலைக்குச் செல்வதற்குப் பல வழிகள் உள்ளன. பாடசாலையைச் சென்றடைய நீங்கள் எந்த வழியைத் தெரிவு செய்தாலும், உங்கள் பிள்ளையின் பாதுகாப்பை உறுதி செய்து கொள்ளுங்கள்.







### நடந்து செல்லல்

- வீதிகளுக்கு அருகிலும், போக்குவரத்து நெரிசலின் போதும் ஏன் கைகளைப் பிடித்துக் கொள்ள வேண்டும் என்பது குறித்து உங்கள் பிள்ளையிடம் பேசுங்கள்.
- போக்குவரத்து விதிமுறைகளையும் பாதைக் குறியீட்டடையாளங்களையும் பேணுவதன் மூலமும் கடப்பதற்குப் பாதுகாப்பான இடங்களைத் தேர்ந்தெடுப்பதன் மூலமும் பாதுகாப்பான பாதசாரி நடத்தைகளை மாதிரியாக்கிச் செய்து கா

### வாகனத்தில் செல்லல்

- உங்கள் பிள்ளையின் ஆசனப்பட்டியை எப்போதும் பாதுகாப்பாகக் கட்டி விடுங்கள், மேலும் அவர்கள் எப்போதும் பிள்ளைகளைப் பாதுகாக்கும் அங்கீகரிக்கப்பட்ட தடுப்புக்காப்புகளை அணிந்திருப்பதை உறுதி செய்யுங்கள்.
- உங்கள் பிள்ளையை காருக்குள் அமர்த்தவும், வெளியே இறக்கிவிடவும், நடைபாதைக்கு மிக அருகிலும் வாகனங்களிலிருந்து விலகியுமுள்ள பின்பக்க பயணிகள் கதவைப் பயன்படுத்துமாறு பரிந்துரைக்கப்படுகிறது.

### சைக்கிளில் செல்லல், இழுத்துச் செல்லல் (towing), இருசக்கர மோட்டார் வாகனத்தில் செல்லல்

- துவிச்சக்கர வண்டி டிரெய்லரில் அல்லது துவிச்சக்கர வண்டியின் இருக்கையில் இருந்தாலும், அனைவரும் தலைக்கவசம் மற்றும் மூடிய காலணிகள் அணிந்திருப்பதை உறுதிசெய்து கொள்ளுங்கள்.
- இடது பக்கமாக வண்டியைச் செலுத்துவதன் மூலமும் நீங்கள் வருவதை மணியோசை எழுப்பி பிறருக்குத் தெரியப்படுத்துவதன் மூலமும் பாதுகாப்பான சைக்கிள் ஓட்டுதல் நடத்தைக்கு முன்மாதிரியாக இருந்து காட்டுங்கள்.

பாடசாலையில் கொண்டு வந்து விடவும் மற்றும் அங்கிருந்து கூட்டிச் செல்லவுமான நடைமுறைகள் என்ன என்பதை அறிய உங்கள் பாடசாலை அல்லது சமூக பாலர் பாடசாலை ஆசிரியையை அணுகுங்கள்



cc BY

# கற்றல்

**பாலர் பாடசாலையில் பிள்ளைகள் விளையாட்டுகளின் மூலம் கற்றுக் கொள்கிறார்கள் - அவர்களின் கற்றலானது வீட்டிலும் பிற சூழல்களிலும் அவர்கள் கற்றுக் கொண்ட விடயங்களின் மீது கட்டியெழுப்பப்படுகிறது.**

பிள்ளைகளின் ஆரம்ப வருடங்களில் உள்ள கல்வித் திட்டங்கள் 'ஆரம்ப வருடக் கற்றல் கட்டமைப்பு' (Early Years Learning Framework) மற்றும் 'WA பாலர் பாடசாலைப் பாடத்திட்ட வழிகாட்டல்' (WA Kindergarten Curriculum Guidelines) என்பவற்றின் ஐந்து வெளியீடுகளால் வடிவமைக்கப்பட்டுள்ளன:


- சிறுவர்களுக்குத் தமது அடையாளம் குறித்த ஒரு வலுவான உணர்வு உள்ளது.
- சிறுவர்கள்
- தமது உலகத்துடன் பிணைந்திருப்பதுடன், அதற்கு பங்களிப்பும் செய்கிறார்கள்.
- சிறுவர்களுக்கு நல்வாழ்வு தொடர்பான ஒரு வலுவான உணர்வு உள்ளது.
- சிறுவர்கள் தன்னம்பிக்கை மிக்கவர்கள் மற்றும் ஈடுபாட்டுடன் கற்பவர்கள்.
- சிறுவர்கள் திறமையாகத் தொடர்பாடக் கூடியவர்கள்.

சிறுவர்களின் கருத்துக்களையும் அவர்களது விளையாட்டுகளையும் கருத்தில்கொண்டு அவற்றிற்கேற்பக் கற்றல் நடவடிக்கைகளைப் பாலர் பாடசாலை ஆசிரியர்கள் உருவாக்குவர்.

## உங்கள் பிள்ளை பல்வேறு வகையான கற்றல் நடவடிக்கைகளை அனுபவித்தறிவார்.



நிறந்தீட்டல், வரைதல், வெட்டுதல் மற்றும் ஒட்டுதல்



புதிர்கள் மற்றும் கட்டுமான விளையாட்டுகள்



புத்தகங்களை ஆய்தல், கதை கேட்டல், மற்றும் கதை சொல்லல்



பேசுதல் மற்றும் செவிமடுத்தல்



ஆடை அலங்காரம் செய்தல், கற்பனையாக விளையாடுதல்



பாடுதல், உரையை செவிமடுத்தல் மற்றும் உரையை வாசித்தல்



நடனமாடுதல் மற்றும் நாடகம்



ஏறுதல், சமநிலையாய் நிற்றல், ஓடுதல், மற்றும் குதித்தல்



டிஜிட்டல் தொழில்நுட்பங்களை பயன்படுத்துதல்



களிமண்ணுடன் விளையாடுதல், மாவு, மணல் மற்றும் தண்ணீருடன் விளையாடுதல்



ஏனைய பிள்ளைகளுடன் பகிர்ந்து கொள்ளவும், யார் மீதும் சாராதிருக்கும் திறனை வளர்க்கவுமான வாய்ப்புகள்



CC BY

## உங்கள் பிள்ளையின் கற்றலில் உதவுதல்

பெற்றோர், குடும்பத்தவர்கள், மற்றும் ஆசிரியர்கள் இணைந்து செயற்படும் போது பிள்ளைகள் சிறப்பாகக் கற்றுக்கொள்கிறார்கள். மற்ற யாரையும் விட உங்கள் பிள்ளையை நீங்களே நன்கு அறிவீர்கள் - உங்கள் பிள்ளையின் ஆர்வங்கள் மற்றும் திறன்கள் பற்றிய தகவல்களை அவர்களின் ஆசிரியருடன் பகிர்ந்துகொள்வது, உங்கள் பிள்ளை பாலர் பாடசாலையிலிருந்து அதிக பலனைப் பெற உதவுகிறது.

வளர்ச்சிசார் தாமதம் அல்லது இயலாமை கொண்ட பிள்ளைகள், பாலர் பாடசாலைக் கல்வித் திட்டங்களில் கலந்துகொள்ளும் பல்வேறுபட்ட மாணவர் குழுக்களின் ஒரு பகுதியினராக உள்ளனர். வளர்ச்சிசார் தாமதம் கொண்ட அல்லது இயலாமைகள் உள்ள பிள்ளைகளுக்கு மேலதிகத் திட்டமிடலும் உதவியும் தேவைப்படுவதனால், ஆசிரியர் குழாம், குடும்பத்தினர், மற்றும் ஏனைய முகவர்களுக்கு (சிகிச்சை வழங்குநர்கள் போன்றோர்) இடையிலான ஒத்துழைப்பு பயன் மிக்கதாக இருக்கும்.


பெற்றோர் மற்றும் பராமரிப்பாளர்களுக்கு பல பாலர் பாடசாலைகள் உதவியாளர்களாக தன்னார்வத் தொண்டு செய்வதற்கான வாய்ப்புகளை வழங்குகின்றன. தன்னார்வத் தொண்டு புரிவதென்பது பாலர் பாடசாலையில் உங்கள் பிள்ளையின் அனுபவத்தைப் பற்றிய ஆழமான புரிதலையும், ஏனைய பெற்றோரைச் சந்திக்கும் வாய்ப்பினையும் உங்களுக்கு அளிக்கும். சில பாலர் பாடசாலைகள், சமூக ஊடகங்கள் அல்லது செயலிகள் ஊடாக பெற்றோரை இணையவழியில் ஒருவரோடொருவர் தொடர்புகொள்வதை ஊக்குவிக்கின்றன.

---

## பாலர் பாடசாலையில் உள்ள உங்கள் பிள்ளைக்கு உதவுவதற்கு பல வழிகள் உள்ளன.



ஒவ்வொரு நாளும் உங்கள் பிள்ளையுடன் அவர்கள் என்ன செய்தார்கள் என்பதைப் பற்றி பேசுங்கள் - இது வீட்டிற்கும் பாடசாலைக்கும் இடையே தொடர்புகளை ஏற்படுத்த உதவுவதுடன், நீங்கள் அவர்கள் மீதும், அவர்கள் என்ன செய்கிறார்கள் என்பது குறித்தும் ஆர்வமாக இருக்கிறீர்கள் என்பதையும் காட்டுகிறது.



வெளியில் விளையாடுவது, உதாரணமாக விளையாட்டு மைதானங்களில் விளையாடுவது, உங்கள் பிள்ளை வலிமை வாய்ந்தவராகவும் நம்பிக்கை மிக்கவராகவும் வளர உதவுவதுடன், கவனம் செலுத்தலிலும் பிரசினம் தீர்த்தலிலும் உதவுகின்ற மூளையின் பகுதியையும் இது பயன்படுத்துகின்றது.



பிள்ளைகளுடன் சேர்ந்து புத்தகங்களை வாசிப்பது, எழுத்து வடிவிலுள்ள சொற்களுக்கு அர்த்தம் இருக்கிறது என்பதை அவர்கள் கற்றுக் கொள்ள உதவுவதுடன், அவர்களுக்கு நிறைய இன்பத்தையும் தரும். இது வாசித்தல் மற்றும் எழுதுதல் பற்றி அவர்கள் அறிந்து கொள்ள உதவுகிறது.



பாடல்களைப் பாடுவது, இசையமைப்பது மற்றும் நடனம் ஆடுவது போன்றன உங்கள் பிள்ளையின் நினைவாற்றலை வளர்ப்பதிலும், அவர்களின் உணர்வுகளை வெளிப்படுத்துவதிலும் உதவுகின்றன.



கட்டுமானம் சம்பந்தமான பொருட்கள் - பொம்மைகள், மணல், அட்டை, இயற்கையான பொருட்கள் – இவை உங்கள் பிள்ளையின் இயக்கம்சார் திறன்களை வளர்த்துக் கொள்ளவும், பிள்ளை ஆக்கபூர்வமாக இருக்கவும், பிரசினங்களைத் தீர்க்கவும் உதவுகின்றன.



கற்பனை விளையாட்டுகள், கடையொன்று நடாத்துவதாக விளையாடுவது போன்றன, உங்கள் பிள்ளை மற்றவர்களுடன் பழகவும், பகிர்ந்து கொள்ளவும், மற்ற பிள்ளைகளுடன் மாறி மாறி விளையாடவும் கற்றுக்கொள்ள உதவுகிறது. மேலும் அவர்கள் பேசும் திறனையும், எண்ணுதல், வரிசைப்படுத்துதல் போன்ற எளிய கணிதத்தையும் பயிற்சி செய்கிறார்கள்.

# ஆரோக்கியமாக இருத்தல்

**ஆரோக்கியமான உடலானது உங்கள் பிள்ளை ஒவ்வொரு நாளும்**

### தூக்கம்

உங்கள் பிள்ளை போதுமானளவு தூங்குகிறது என்பதை உறுதி செய்து கொள்ளுங்கள். ஓய்வெடுக்கவும் நித்திரைகொள்ளவும் வழக்கமான ஒரு நேரத்தை ஏற்படுத்திக் கொள்ளுங்கள்.

### காலையுணவு

போசாக்கான காலை உணவை உட்கொள்வது உங்கள் பிள்ளையை அன்றைய நாளுக்காகத் தயார்படுத்துகிறது - பிள்ளைகள் வெறும் வயிற்றில் கற்றுக்கொள்வது கடினமாகும்.

### பகலுணவு பெட்டி

உங்கள் பிள்ளை விரும்பி உட்கொள்ளும் என்று உங்களுக்குத் தெரிந்த ஆரோக்கியமான பகலுணவுப் பெட்டியொன்றைப் பொதி செய்யுங்கள். உங்கள் பிள்ளை தனது உணவைத் திறந்து யாருடைய உதவியுமின்றி சாப்பிடுவது எவ்வாறு என்பதை அவர் கற்றுக்கொள்ள கொள்ள உதவுங்கள்.

### தடுப்பூசி ஏற்றம்

உங்கள் பிள்ளை பாலர் பாடசாலை செல்லும் பொருட்டு, அவர்களது தடுப்பூசியேற்ற அட்டவணை புதுப்பிக்கப்பட்ட நிலையில் இருக்க வேண்டும் (அவர்களது வயதுக்கும், ஏதேனும் வரையறுக்கப்பட்ட வைத்திய நிலைமைகளுக்கும் ஏற்ப). உங்களிடம் இந்தப் பதிவுகள் இல்லையென்றால், பாடசாலை அல்லது சமூக பாலர் பாடசாலை ஆசிரியரிடம் பேசுங்கள், அவர்களால் உங்களுக்கு உதவ முடியும்.

### மலசலகூடம் செல்லப் பழக்குதல்

ஆடைகளைக் கழற்றவும், குனியவும், ஆடைகளை மீள அணியவும், கழிவறையிலுள்ள சுத்தம் செய்யும் தாள்களைப் பயன்படுத்தவும், கழிவறையைச் சுத்தம் செய்யவும், மற்றும் கைகளைக் கழுவவும் நிறைய பயிற்சிகளை வழங்குவதன் மூலம் உங்கள் பிள்ளை சுயமாகக் கழிவறையைப் பயன்படுத்த அவருக்குஉதவுங்கள்.

### மருத்துவ விடயங்கள்

உங்கள் பிள்ளைக்கு ஏதேனும் ஒவ்வாமை/ வைத்தியத் தேவைகள் இருப்பின், நீங்கள் குறித்த ஆசிரியருக்கு அதனைத் தெரியப்படுத்த வேண்டும்; அப்போது தான், அவற்றை நிர்வகிப்பதற்கென ஒரு திட்டம் வகுக்கப்பட முடியும்.

**வெவ்வேறு அளவிலான சுய பாதுகாப்புத் திறன்களுடன் பிள்ளைகள் பாடசாலைக் கல்வியைத் தொடங்குவார்கள். யாரையும் சாராதிருத்தல் மற்றும் பங்கேற்றல் என்பவற்றைக் கட்டியெழுப்ப உங்கள் பிள்ளை ஏற்கனவே கற்றுக்கொண்டுள்ள திறன்களை அடித்தளமாகப் பயன்படுத்துங்கள்.**

### உங்கள் பிள்ளை நோயுற்றால் என்ன செய்வது

நாம் அனைவரும் நம் குழந்தைகள் ஆரோக்கியமாகவும் நலமாகவும் இருக்க வேண்டும் என்று விரும்புகிறோம்; அப்போது தான் அவர்களால் தத்தமது திறமைக்கு ஏற்றவாறு கற்றலில் ஈடுபட முடியும். உங்கள் பிள்ளை நோயுற்றால், சகலரது பாதுகாப்பையும் கருத்திற்கொண்டு அவர்களை வீட்டிலேயே வைத்திருத்தல் அல்லது அவர்களுக்கு மாற்று சிகிச்சை வழங்க ஏற்பாடு செய்தல் முக்கியமானதாகும். நோய் காரணமாக உங்கள் பிள்ளையை வீட்டிலேயே வைத்திருக்க நேர்ந்தால், அதனை பாலர் பாடசாலைக்கு தொலைபேசி, குறுஞ்செய்தி அல்லது மின்னஞ்சல் மூலம் தெரியப்படுத்த வேண்டும்.

உங்கள் பிள்ளை பகற்பொழுதில் நோய்வாய்ப்பட்டால், பாலர் பாடசாலை உங்களுடன் தொடர்பு கொண்டு, உங்கள் பிள்ளையை வீட்டிற்கு அழைத்துச் செல்லும்படி வேண்டிக் கொள்ளும். இதன் காரணமாக,

உங்கள் பிள்ளையின் அவசரகால தொடர்பு விவரங்களை அவர்களது பாலர் பாடசாலையில் புதுப்பிக்கப்பட்ட நிலையில் வைத்திருப்பது அவசியமாகும்.

உங்கள் பிள்ளையின் ஆரோக்கியம் குறித்த மேலதிக தகவல்களுக்கு WA Health -ஐப் பார்வையிடுங்கள் அல்லது உங்கள் பிள்ளையின் வைத்தியரைச் சந்தியுங்கள்.
HealthyWA.wa.gov.au



CC BY

# உங்கள் பிள்ளை படிக்கும் வருடம்

### ஒவ்வொரு நாளும் பாடசாலைக்குச் செல்வது முக்கியமானது

பாலர் பாடசாலைக்குத் தவறாமல் செல்வது, உங்கள் பிள்ளை ஒவ்வொரு நாளும் கற்றுக்கொண்டது அடுத்த நாள் கல்விக்கு அடித்தளமாக அமைகிறது தவறாமல் பாடசாலைக்குச் செல்லும் பழக்கத்தை வளர்த்துக் கொள்வது அவசியமாகும்; அப்போதுதான் எதிர்காலக் கற்றலுக்குத் தேவையான முக்கியமான யோசனைகள் மற்றும் திறன்களை உங்கள் பிள்ளை தவறவிடாதிருக்கும். பாலர் பாடசாலை நாட்களைத் தவறவிடுவதன் மூலம், உங்கள் பிள்ளை தனது நண்பர்களுடனான கற்றல் மற்றும் செயற்பாடுகளை இழக்கிறது.

### நீங்கள் பின்வரும் வழிகளில் உதவி செய்ய முடியும்:

- பாலர் பாடசாலையைப் பற்றி நேர்மறையாகப் பேசுதல், அப்போதுதான் உங்கள் பிள்ளை ஒவ்வொரு நாளும் பாடசாலைக்கு மகிழ்ச்சியாகச் செல்லும்.
- உங்கள் பிள்ளை நட்பை வளர்த்துக் கொள்ளும் பொருட்டு விளையாடுவதற்கான சந்தர்ப்பங்களை அமைத்துக் கொடுத்தல்.
- சரியான நேரத்தில் உங்கள் பிள்ளையைப் பாடசாலைக்கு அழைத்து வருவதும், வந்து கூட்டிச் செல்வதும்.
- சாத்தியமான சந்தர்ப்பங்களில்,
- பாடசாலை விட்ட பிறகு அல்லது பாடசாலை விடுமுறை நாட்களில் வைத்தியர்கள், பல் வைத்தியர்கள் மற்றும் விஷேட நிபுணர்களுடன்
- சந்திப்புகளை மேற்கொள்ளல்.
- பாடசாலை நடக்கும் பருவ நாட்களில் அல்லாது, பாடசாலை விடுமுறை நாட்களில் குடும்ப விடுமுறைகள் எடுத்தல்.

உங்கள் பிள்ளை பாலர் பாடசாலைக்குச் செல்லத் தயங்கினால், அவருடைய ஆசிரியர் அல்லது பாடசாலை அதிபருடன் பேசுங்கள்.

### பாலர் பாடசாலையில் நேரத்திற்கு அப்பாற்பட்ட நேரங்களில் உங்கள் பிள்ளையை கவனித்துக் கொள்ளுங்கள்

வழக்கமாக பிள்ளைகளின் பாலர் பாடசாலையானது மாலை 3 மணி ஆகும் போது முடியும், இருப்பினும், அந்நேரம் மாறுபடலாம்.

பாலர் பாடசாலை நேரத்துக்கு முன்னரோ அல்லது அதற்குப் பின்னரோ உங்கள் பிள்ளையைப் பராமரிக்க வேண்டி ஏற்பட்டால், நீங்கள் பாடசாலை நேரத்திற்குப் பின்னரான உதவி நேர வசதி'(Outside School Hours Care (OSHC)) யை அணுகலாம். உங்களது பாடசாலையில்/ சமூக பாலர் பாடசாலையில் OSHC பற்றிய விவரங்கள் இருக்கும்.

### குழந்தை வளர்ப்புக்கான உதவி

பிள்ளைகள் வளமான சூழலில் வளர்க்கப்படும் போது செழித்து வளர்கிறார்கள். Triple P – 'நேர்மறையான குழந்தை வளர்ப்புத் திட்டம்' (Positive Parenting Program) ஆனது சகல பெற்றோருக்கும் மகிழ்ச்சியான மற்றும் நம்பிக்கை மிக்க பிள்ளையொன்றை வளர்க்க உதவும் எளிய, நடைமுறை உத்திகளை வழங்குகிறது.

### நேர்மறையான குழந்தை வளர்ப்பிற்கான 5 படிகள்

1. பாதுகாப்பானதும், சுவாரஷ்யமானதுமான ஒரு சூழலை உருவாக்குங்கள்
2. நேர்மறையான கற்றல் சூழலொன்றை உருவாக்குங்கள்
3. உறுதியான ஒழுக்கத்தைப் பேணுங்கள்
4. யதார்த்தமான எதிர்பார்ப்புகளைக் கொண்டிருங்கள்
5. நீங்கள் ஒரு பெற்றவர் என்ற வகையில் உங்களைக் கவனித்துக் கொள்ளுங்கள்

இலவச
Triple P கருத்தரங்கு ஒன்றிற்காகப் பதிவு செய்வது பற்றி உங்களது பாடசாலையில் கேளுங்கள் அல்லது மேலும் அறிந்து கொள்ள:

triplep-parenting.net.au/wa.



cc BY

## உங்களது கேள்விகளுக்குப் பதிலளிப்பதற்கான சரியான நபரைக் கண்டறியுங்கள்

உங்கள் பிள்ளையின் பாலர் பாடசாலை அனுபவம் பற்றி ஏதேனும் கேள்விகள் இருந்தால், உங்கள் பிள்ளையின் ஆசிரியரிடம் கேட்பதிலிருந்து தொடங்குங்கள். பாலர் பாடசாலைக் கல்வித் திட்டம், உங்கள் பிள்ளை, அல்லது ஆசிரியர் குழாம் குறித்து உங்களுக்கு இருக்கும் கேள்விகள் அல்லது கவலைகள் குறித்தும் பாடசாலை அதிபர்களால் கவனம் செலுத்த இயலும்.

பிள்ளைகளின் இயலுமை அல்லது வளர்ச்சிப் படிநிலை எதுவாக இருந்தாலும், எல்லா குழந்தைகளும் தனிப்பட்ட பலங்கள், ஆர்வங்கள் மற்றும் கற்கும் திறன் ஆகியவற்றைக் கொண்டிருப்பர். பெற்றோர்கள் மற்றும் பராமரிப்பாளர்கள் என்ற வகையில், உங்கள் பிள்ளையை மற்ற யாரையும் விட உங்களுக்கு நன்றாகத் தெரியும். மேலும், உங்கள் பிள்ளையின் பலங்கள் மற்றும் தேவைகள் பற்றிய உங்களது அறிவைப் பகிர்ந்து கொள்வதானது, உங்கள் பிள்ளை பாலர் பாடசாலையில் வெற்றிகரமாகப் பங்கேற்பதற்கான நிலைமைகளை உருவாக்குவதில் உதவும்.

பிள்ளைகளினதும் அவர்களது குடும்பங்களினதும் கலாச்சார மற்றும் மொழி ரீதியான பின்னணிகள் மதிப்பு மிக்கதாகவும், மரியாதைக்குரியதாகவும் கருதப்படுகின்றன. தாய்மொழியிலுள்ள பாண்டித்தியமானது பொதுவான கற்றலிலும், பிற மொழியொன்றை அல்லது பிரதேச மொழி-வழக்கொன்றைக் கற்றுக் கொள்வதிலும் உதவுகிறது, ஆகவே வீட்டில் பேசும் மொழிப் பயன்பாட்டினைப் பராமரித்துவரவேண்டியது முக்கியம். உங்கள் பிள்ளை வீட்டில் ஆங்கிலம் அல்லாத வேறு மொழியைப் பேசுவாராயின், அது குறித்து ஆசிரியரிடம் தெரிவிக்க வேண்டியது அவசியமாகும்; அப்போது தான் அவர்களது கற்றல் தேவைகள் பூர்த்தி செய்யப்படும்.

நீங்கள் வேற்று மொழியொன்றைப் பேசுவதோடு, ஆங்கிலத்தில் பாண்டித்தியம் இல்லாமலும் இருப்பின், உங்கள் பிள்ளையின் முன்னேற்றம் குறித்துக் கலந்துரையாடுவதற்கு, கேள்விகளைக் கேட்பதற்கு அல்லது உங்களுக்கு இருக்கும் கவலைகளைப் பகிர்ந்துகொள்வதற்கு, மொழிபெயர்ப்பாளர் ஒருவரைப் பயன்படுத்துவதைப் பற்றி உங்கள் பிள்ளையின் ஆசிரியரிடம் கேளுங்கள். பெரும்பாலான பாடசாலைகள் பல்வேறு மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்ட பல ஆவணங்களை வழங்குகின்றன - உங்களது பாடசாலை இணையதளத்தைப் பார்வையிடுங்கள் அல்லது உங்களது பாடசாலை/ சமூக பாலர் பாடசாலையில் கேளுங்கள்.

## பயனுள்ள இணையதளங்கள்

**'கல்வித் திணைக்களம் WA'**
education.wa.edu.au

**AISWA – 'மேற்கு அவுஸ்திரேலிய சுயாதீன பாடசாலைகள் சங்கம்'**
ais.wa.edu.au

**CEWA – 'கத்தோலிக்கக் கல்வி WA'**
cewa.edu.au

**'சமூக பாலர் பாடசாலைகள்'**
communitykindys.org.au

**HealthyWA – 'குழந்தைப்பருவத் தடுப்பூசியேற்ற அட்டவணை'**
healthywa.wa.gov.au/Articles/A_E/Child-hood-immunisation-schedule

**Triple P – 'நேர்மறையான குழந்தை வளர்ப்புத் திட்டம்' (Positive Parenting Program)**
triplep-parenting.net.au/au-uken/find-help/triple-p-parenting-in-western-australia

**'சிறுவர்கள் மற்றும் இளம்பராயத்தினருக்கான சுகாதார சேவை**' (Child and Adolescent Health Service)
cahs.health.wa.gov.au

**'குழந்தை வளர்ப்பு வலையமைப்பு'**
(Raising Children Network)
raisingchildren.net.au

**'புதியதொரு ஆஸ்திரேலியாவின் உருவாக்கம்' (Reimagine Australia) (வளர்ச்சி தாமதமான அல்லது இயலாமைகள் உள்ள குழந்தைகளுக்கான உதவி**)
reimagine.org.au

**'ஆரம்ப வருட கற்றல் கட்டமைப்பு' (Early Years Learning Framework)**
acecqa.gov.au/sites/default/files/2020-05/belonging_being_and_becoming_the_early_years_learning_framework_for_australia.pdf

**பாலர் பாடசாலை பாடத்திட்ட வழிகாட்டல்கள்' (Kindergarten Curriculum Guidelines)**
k10outline.scsa.wa.edu.au/media/documents/outline_downloads/Western-Australian-Kindergarten-Curriculum-Guidelines-pdf.pdf



CC BY